மருத்துவ மனையில் போதுமான அளவுக்குத் தண்ணீர், விளக்கு வசதிகள் இருக்கின்றனவா என்பதைக் கண் காணிப்பது- இவை போன்ற பணிகளை இந்தக் குழுக்கள் மேற்பார்வையிடுகின்றன. அவைகளிலே உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினால் மருத்துவ அதிகாரிகள் உரிய நடவடிக்கை களை எடுக்கிறார்கள். ஆனால் ஒரு மருத்துவ மனைக்குப் பெரிய கட்டடம் வேண்டுமென்று சொன்னால், அந்த சிபாரிசு அரசுக்கு வருகிறது. அரசாங் கத்தின் நிதிநிலைமையைப் பொறுத்து, தலைமை மருத்துவ அதிகாரியைக் கலந்தாலோசித்து அந்த சிபாரிசை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்படும். நான் ஏற்கெனவே குறிப்பிட்ட குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படாமல் எங்காவது இருக்குமானால், அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

பி.ஐ.எம். பட்டதாரிகள்.

*377 வினா—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா?

(அ) பாளையங்கோட்டையிலுள்ள அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி யில் கல்வி பயின்ற பி.ஐ.எம். (B.I.M.) பட்டதாரிகளுக்கு உடனடி வேலைவாய்ப்பு வழங்க அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை யாது?

(இ) பி.ஐ.எம். பட்டதாரிகளில் தற்போது எத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) பாளையங்கோட்டையிலுள்ள அரசு இந்திய முறை மருத்துவக்கல்லூரியிலும் அதைச் சார்ந்த மருத்துவ மனையிலும், சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா அரசு இந்திய முறை மருத்துவ மனையிலும், அரசு பி.ஐ.எம். பட்டதாரிகளை நியமித்து அவர் களுக்கு ஏற்கெனவே வேலை வாய்ப்பளித்துள்ளது. எல்லா மாவட்ட மருத்துவமனைகளிலும், பத்து வட்ட மருத்துவமனைகளிலும் சித்த மருத் துவப் பிரிவுகள் திறக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவிலும் ஒரு பி.ஐ.எம். பட்டதாரி உதவி மருத்துவ அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன் வருடத்திற்கு இருபதாக வட்டம், வட்டமல்லாத மற்றுமுள்ள நூறு மருத்துவமனைகளில் சித்த மருத்துவப் பிரிவுகள் திறப்பதற்காகத் தற்போதைய ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு திட்டம் சேர்க்கப்பட்டுள்ளது. அரசின் அறிவுரைக்கேற்ப, ஊராட்சி ஒன்றியங்களும், நகராட்சிகளும், கோயில்களும், தாங்கள் நடத்தும் சில மருத்துவமனைகளில் பி.ஐ.எம். பட்டதாரிகளை நியமித்துள்ளனர்.

(இ) 31-12-1973-ல் உள்ளபடி, 45 பேர்கள்.

திரு. கோ. இளங்கோவன்: தலைவரவர்களே, ஆண்டுதோறும் எத்தனை பி.ஐ.எம். பட்டதாரிகள் வெளிவருகிறார்கள்.?

1974 மார்ச் 12]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஒவ்வொரு ஆண்டும் சேர்க்கப்படுகிறவர்கள் தங்கள் முழு படிப்பையும் முடித்து வெளிவர ஐந்தாண்டு காலம் ஆகிறது. சில மாணவர்கள் பாதியிலேயே நிறுத்திவிடக்கூடிய சூழ்நிலையும் ஏற்படுகிறது. ஆண்டுதோறும் படிப்பை முடித்து வெளி வருகிறவர்கள் ஏறத்தாழ 30 பேர்கள் என்று கருதுகிறேன். முழு குறிப்பு என்னிடம் இல்லை.

திரு. த. சோணையா : தலைவரவர்களே, இந்த இந்திய மருத்துவ முறை பயிற்சி பெறுவதற்கு தேர்ந்தெடுக்கப்படுகின்ற மாணவர்களின் கல்வித் தரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்ற பின்னுல், கல்லூரியில் புகுமுக வகுப்பில் தமிழில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். அது பற்றி தனிக்கேள்வி போட்டால் விபரம் தெரிவிக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சார் இப்போது பி.ஐ.எம். பட்டம் பெற்றவர்களுக்கு மேல்பட்டப் படிப்புப் படிப்பதற்கு ஏதாவது ஏற்பாடு இருக்கிறதா? இருக்கிறதென்ருல் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பி. ஐ. எம். பட்டதாரிகள் எம்.டி. பட்டம் பெறுவதற்கு சித்த மருத்துவத் துறையிலும் குண படிப்புத் துறையிலும் வகுப்புகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு துறையிலும் 10 மாணவர்கள் சேர்க்கப்படுகிருர்கள். இப் போது வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது 45 பேர்கள் வேலையை எதிர்பார்த்து இருப்பதாகக் கூறினுர்கள். இந்தப் படிப்பு முடிந்ததும் அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, வேலை வாய்ப்பை அடிப்படையாக வைத்துத்தான் படிக்க வேண்டுமென்று கருதினுல், சேர்த்துக் கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டிவரும். அப்படிக் குறைக்கும் போது தனிப்பட்ட முறையிலே அவர்கள் மருத்துவப் பணியாற்றும் வாய்ப்பு இருக்காது. அரசாங்கம் தன்னுடைய சக்திக் கேற்ற முறையிலே வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறது. மற்ற வர்கள் மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்ற முறையிலே தாங்க ளாகவே வேலை வாய்ப்பைத் தேடிக்கொள்ள வேண்டும். இந்தப் படிப்பை முடித்தவர்கள் இப்போது 45 பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறுர்கள். அதே மாதிரி அலோபதி முறையில் பயிற்சி பெற்றவர்கள் ஏறத்தாழ 750 பேர்கள் வேலைக்குக் காத்துக்கொண்டிருக்கிறுர்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மு. ப. 9–30)

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, இந்த இந்திய மருத்துவப் பட்டதாரிகளுக்கு அரசாங்க மருத்துவ மனையில் வேலை கொடுப்பது சாத்தியமில்லை என்றாலும், அவர்கள் தனிப்பட்ட முறையில் மருத்துவத் தொழில் செய்ய அரசாங்கம் உதவி செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: டாக்டராக இருந்தாலும், இன்ஜினியராக இருந்தாலும், வேறு தொழில் வல்லுநராக இருந்தாலும் தனிப்பட்ட முறையில் தொழில் செய்ய மத்திய அரசு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அந்தக் கடன் விரைவில் கிடைக்க அரசு உதவி செய்யும்.

திரு. நா. வீராசாமி: இந்திய மருத்துவக் கல்வியைக் கற்றுக் கொடுக்கிற இடம் பாளையங்கோட்டையாக இருப்பதால் அதற்கு வரவேண்டிய முக்கியத்துவம் வரவில்லை. அதற்குக் கிடைக்க வேண்டிய விளம்பரம் கிடைக்கவில்லை. சென்னை நகரில் அப்படிப்பட்ட கல்லூரியை வைத்தால் இந்திய மருத்துவக் கல்வியின் தரம் மேலும் உயர வாய்ப்பிருக்கும். அப்படிப்பட்ட யோசனையை அரசாங்கம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நாற்றங்காலில் விதைத்துத்தான் இன்னொரு இடத்தில் பிடுங்கி பயிர் நடப்படுகிறது என்றாலும் பாளையங்கோட்டையில் இந்தக் கல்லூரி ஏற்படுத்தப்பட்டு 5 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆகவே, கதிர்விடுகிற பயிராகிவிட்டதால் இப்போது பிடுங்கி வேறு இடத்தில் நட முடியாது.

கோவையிலுள்ள குப்புசாமி நாயுடு மருத்துவ மனை.

*378 வின—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கோவையிலுள்ள குப்புசாமி நாயுடு மருத்துவ மனையில் புற்று நோய் சிகிச்சைப் பிரிவு உள்ளதா?

(இ) அம்மருத்துவ மனைக்கு அரசால் அளிக்கப்படும் சலுகைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) மருத்துவ மனையைப் பராமரிக்க தொடர் மானியமும், கட்டிடங்களைக் கட்டுவதற்காகவும், இயந்திரங்கள் கருவிகள் முதலியன வாங்குவதற்காகவும் தொடரா மானியமும் இந்த நிறுவனத்திற்கு அரசு வழங்கியுள்ளது.

திரு. எ. சுப்பிரமணியம்: குப்புசாமி நாயுடு மருத்துவ மனை பெண்கள் மருத்துவ மனை. ஆண்களுக்கு அதிகமாக புற்றுநோய் ஏற்படுகிற காரணத்தினால், கோவையில் இருக்கிற இ.எஸ்.ஐ. மருத்துவ மனையில் ஆண் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருவார்களா?